செய்தி வெளியீடு எண்–494 நாள்–28.6.2008

## <u>செய்தி குறிப்பு</u>

போக்குவரத்து துறை மூலம் செய்யப்பட்டு வரும் முக்கிய பணிகளை ஆய்வு செய்யும் பொருட்டு மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் 27.6.2008 அன்று காலை 10.00 மணி அளவில் அனைத்து வட்டார போக்குவரத்து அலுலர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போக்குவரத்து துறையின் முக்கிய பணிகளான வாகன பதிவு, உரிமம் வழங்குதல், உரிமம் வழங்குதல், வரி வசூலித்தல் மற்றும் விதிகளை மீறும் வாகனங்கள் மீது நடவடிக்கை எடுத்தல் ஆகிய பணிகள் குறித்து மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டார். கடந்த 2007–2008 ஆம் ஆண்டு வருவாய் வசூலில் நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூ.1441 கோடியை விட அதிகமாக வசூல் செய்யப்பட்டதை போல இந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட தொகையினை விட அதிகமாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து தனி கவனம் செலுத்தி வாகன விபத்துக்களை குறைக்கும் பொருட்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

பொதுமக்களுக்கு பணிகளை துரிதமாக செய்து கொடுக்கும் பொருட்டும் அலுவலக உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் போக்குவரத்து துறை அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்ட அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. இப்பணிகளை விரைந்து முடிக்க ஆவன செய்யுமாறு அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இத்துறையில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர், ஓட்டுனர் மற்றும் இரவு காவலர் பணியிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு அரசாணை பெறப்பட்டுள்ளதை தொடர்ந்து வட்டார போக்குவரத்து அலுவலர்கள் துரித நடவடிக்கை எடுத்து இப்பணியிடங்களை நிரப்ப ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

புதிதாக கட்டிடம் கட்டப்பட வேண்டிய அலுவலகங்களுக்கு தேவையான நிலங்களை விரைந்து தேர்வு செய்யுமாறு அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர். மேலும் போக்குவரத்து துறை சம்மந்தப்பட்ட அனைத்து விண்ணப்ப படிவங்களும் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுவதை உறுதி செய்து எந்த ஒரு புகாருக்கும் இடம் தராமல் பணியாற்றுமாறு அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

போக்குவரத்து துறை தற்போது முழுவதுமாக கணினி மயமாக்கப்பட்டு வருகிறது. அனைத்து வட்டார போக்குவரத்து மற்றும் பகுதி அலுவலகங்களை அகண்ட அலைவரிசை மூலம் இணைத்து தகவல் பரிமாற்றம் செயல்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு ஜுலை மாத இறுதிக்குள் அனைத்து

அலுவலகங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் தற்போது 25 வட்டார போக்குவரத்து மற்றும் பகுதி அலுவலகங்களிலும் அமுல்படுத்தப்பட்டு வரும் கணினி மூலம் பழகுநர் ஓட்டுனர் உரிமம் வழங்கும் முறையை மீதம் உள்ள அலுவலகங்களில் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

போக்குவரத்து துறை மூலமாக தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் இணையதள சேவைகள் குறித்த தகவல்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்தி பலரும் பயன்படுத்தும் வண்ணம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது,

கனரக ஓட்டுனர் உரிமங்களை புதுப்பிக்கவும் புதிதாக பெறுவதற்கும் அரசு அறிவித்துள்ள ஒரு நாள் சிறப்பு பயிற்சியினை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு சென்று 1.10.2008 முதல் இதனை அமுல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்பட்டனர்.

விபத்து கால அவசர சிகிக்சை மையங்களை அதிக பயன்பாடு இல்லாத மையங்களை கண்டறிந்து அவைகளை அதிக தேவை உள்ள இடத்திற்கு மாற்றியமைக்க அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

சாலை விதிகளை மீறி வாகனம் ஓட்டுபவர்கள், குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்கள், விபத்தினை ஏற்படுத்திய வாகன ஓட்டுனர்கள் ஆகியவர்களின் ஓட்டுனர் உரிமங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவும் ரேசன் அரிசியை கடத்தி செல்லும் வாகனங்களின் அனுமதியை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

வருவாய் வரி வசூல் வட்டத்தின் கீழ் நிலுவை வரியினை வசூல் செய்ய வட்டார போக்குவரத்து அலுவலர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து நிலுவையில் உள்ள வரியை கால தாமதமின்றி உடனடியாக வசூலிக்க அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் அறிவுறுத்தப்பட்டனர்.

சென்னையில் தற்போது சென்ட்ரல் ரயில் நிலையம், கோயம்பேடு பஸ் நிலையம் ஆகிய இடங்களில் நல்ல முறையில் இயங்கி வரும் பிரி பெய்டு ஆட்டோ நிலையங்கள் போன்று மையங்கள் அதிக இடங்களில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

போக்குவரத்து ஆணையர் திரு சி.பி.சிங், இணை/துணை போக்குவரத்து ஆணையாளர்கள் மற்றும் அனைத்து வட்டார போக்குவரத்து அலுவலர்களும் இவ்வாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சி.பி.சிங்,
போக்குவரத்து ஆணையாளர்
சென்னை

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.